கடவுள் துணை.

# வீராம்பட்டணமென்னும்

# வீரராகவன்பட்டணம்

# வழிநடைச்சிந்து.

இஃது

புதுவை

குவர்ன்மா - தருமக்கல்விச்சாலைத்

தமிழ்த்தலைமைப்புலமை

மஹாராஜஸ்ரீ

சாமி - பொன்னுப்பிள்ளை

அவர்களாலியற்றிப்

புதுவையில் ஆன்றோர் அநுமதிபெற்று

ஸ்தாபித்திருக்கின்ற

ஸ்ரீ சுவேதபத்மாசன அக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1889.



உ

கணபதி துணை.

ஸ்ரீ அம்பாள் துணை.

வீரராகவன்பட்டணம்

# ஸ்ரீசெங்கழனியம்மை வழிநடைச்சிந்து.

காப்பு.

வெண்பா.

வீரரா கவன்றன் வியனகரச் சீர்வழியின்
பேரமர்ந டைப்பதத்தைப் பேசவரும்—ஏரமரு
மாதங்கத் தானளித்த மாதங்க வத்திரன்றன்
மாதங்கத் தாடுணையே மற்று.

சிந்து.

ஓங்காரவடிவாகி ஒளிருந்தயாநிதியைப்
பாங்கார்கஜாநனைப் பரமதயாளனைச்
சித்திவிநாயகனுஞ் செல்வக்கணபதியைப்
பத்தியாகப்பணிந்தே பல்வளம்நிறைந்திலங்கும்
வீரராகவன்பட்டணம் வீற்றிருக்குந்தாயாராஞ்
சீரமருஞ்செங்கழனிச் செல்விதனைச்சேவிக்கச்

செழிப்பாகப்போய்வருவோங் - கண்ணாட்டியாஞ்
சித்திரமேவருவாயடி, (௧)

மானனையகண்ணாளே மாவன்னநடைப்பெண்ணாளே
கானமருங்குழலாளே கனகதண்டைக்கழலாளே
தேனனையமொழியாளே சீரொழுக்கவழியாளே
சீனப்பட்டுடையாளே சித்திரப்பொட்டுடையாளே
வானவிர்மின்னிடையாளே வண்ணரம்பைத்தொடையா
கானமயிலொயிலாளே காதலினற்செயலாளே [ளே
கனமணிப்பூவாடையெல்லாம் - அணிந்தேயென்
கண்மணியேவந்திடுவாய். (௨)

ஆசைமிகுமணவாளா அழகியதிருத்தாளா
ஓசையுற்றிடுந்தயாளா உத்தமமாகுங்குணாளா
வாசமலரணிதோளா மலர்க்கணையுறும்வேளா
பாசங்கொண்டேன்வெகுநாளா பக்ஷமாயெனையாளா
நேசனேயென்கண்ணாளா நின்றுவிடேனினிவாளா
போஜனைப்போல்புகழாளா பொருந்தாருக்கொருவாளா
புண்ணியனேவருவேனின்றே - அன்பாகப்
புஷ்பங்கள்பூணலுற்றார். (௩)

கொண்டல்நிகர்க்குழலைக் கோதிச்சிணுக்கறுத்து
அண்டியேகொண்டையினில் ஐவகையாம்பின்னலிட்டு
மல்லிகைமுல்லையாம் மருவுமருக்கொழுந்தாம்
நல்லமன்மதபாணம் நந்தியாவட்டைரோஜா
சம்பங்கிபட்டுரோஜா சாமந்திமற்றுமுள்ள
சம்பந்தமானபுஷ்பஞ் சந்தமுறத்தானணிந்து
சந்தோஷத்துடனேபின்னும் - ஆபரணந்
தரிக்கத்தொடங்கலுற்றாள். (௪)

ஜடைப்பில்லைகுச்சுக்குப்பி சந்த்ரபிறைசூர்யபிறை
ஜடைநாகம்மயிர்மாட்டி ஜம்புல்கம்மல்ஜிமிக்கி
நத்துபுலாக்குகொப்பு நன்முருகுகுருட்டிக்கை
கத்திரிப்பாவல்ரத்னக் கண்டசரங்காசிமாலை
கல்லிழைந்தவங்கித்தோடா கடகமோதிரம்பீலி
கல்லெனுந்தண்டைக்கொலுசு காலாழிமுதலான
கலன்களெலாமணிந்தே - ஆடையைக்
கவினுறவுடுக்கலுற்றாள். (௫)

வண்டுநிகர்விழியிலே வண்ணமுறமையணிந்து
செண்டனையகுஜத்திலே சித்திரரவிக்கையிட்டுக்

கட்டும்பாவாடையின்மேல் காசித்துப்பட்டாதரித்துத்
திட்டமாகக்கல்லிழைத்த திகழொட்டியாணம்பூண்டு
மல்லிகையத்தராம் மருக்கொழுந்தினத்தராஞ்
சொல்லுமற்றஅத்தரெல்லாஞ் சுகமாகத்தான்பூசிச்
சுந்தரனேவந்தேனென்றார் - அனம்போலச்
சொகுசாநடை - நடந்து. (௬)

பழுதில்லாஇரத்தினமே பைங்கொடியேபாரடிநீ
வழுதாவூர்ராஜவீதி வடை - தோசைமுறுக்குகள்
பொழுதாம்பொழுதாவும் பூசுரர்கள்விற்கின்றார்
எழுதுங்கணக்கர்களும் இனியநெல்லுமண்டியும்பார்
கந்தப்பமுதலியாரென் கண்மணியின்வீடிதுதான்
சந்ததமளிகையினிற் சரக்குவிற்குங்கிடங்கது
சாந்தஅருணாசலப்பிள்ளை - பொடிக்கடை
தானிதோகண்டுசெல்லடி. (௭)

பன்னீர்ஜிலேபிலட்டு பன்னீரல்வாபகோடா
உன்னதஅருபுரியும் உயர்ந்திடும்பாற்கோவா
மிட்டாய்களைவாங்கடிநீ மெல்லவேவடைந்திடி
பட்டாணிவெண்கலமாம் பாத்திரங்கள்விற்கின்றார்

புடைவைக்கடைகளையும் புஷ்பக்கடைகளையும்
பெடையனம்போனடக்கும் பெண்களையும்பாரடீ
பிரசமலர்க்குழலணங்கே - இதனைப்
பெரியக்கடைவீதியென்பார். (௮)

சித்தஜனாகியவள்ளல் திபாகுவேள்தருமத்தால் [ரூர்
முத்ரியர்பாளையத்தண்ணீர் மொண்டுகொண்டுபோகின்
உத்தமியேகாணடீ உண்மைப்பனரங்கப்பிள்ளை
வித்தகன்றன்வீதியிது வேளாளர்வீதியது
சத்திபமாவசனனுஞ் சண்முகவேலாயுதவேள்
பத்திபுறம்வீதியிது பாங்குடனீபாரடி
பார்த்தசாரதிமுதலியாம் - என்னிடத்தென்றும்
பட்சமுள்ளோன்வீதிபாரடி. (௯)

அண்டிவருவோர்களுக் காதரவுதான்புரிந்து
கண்டனையமொழிகூறிக் கனகபூஷணமானை—
தண்டாமலேபன்னனுஞ் சந்தோஷமாக்கொடுக்குந்
விண்டருவைநிகர்முத்துச் சேஷாசலக்குமணன்
பண்டருநல்வீதியிது பண்பன்வேங்கடாசலவேள்
ஒண்டருசேர்மார்பனும் உத்தமன்றன்னில்லமது

உத்தமியாங்கண்மணியாளே - இவற்றை
உள்ளத்தில்வைத்திடுவாய். (௧0)

சிறந்தமாதாகோவில் சேர்ந்தெரேசுவீதியிது
விரைந்தேயுப்பாறுசெல்லும் வீதிசிறுபாலமது
இரப்பவருக்கிடுகையான் என்ஸ்பெக்தோர்சாமிமால்
நரந்தமணியுந்தோளான் நண்பன்றன்றெருவது
சந்தனமணியுமார்பன் சாந்துகுளைவிடது
அந்தமுறுமவக்காலுய் அண்ணல்ராஜேந்திரன்வீதி
ஐயன்ஜெநாதபூபன் - பங்களாவின்
அழகினைப்பார்த்துச்செல்லடி. (௧௧)

செல்விருந்தோம்பென்னச் செப்புங்குறட்கிசைய
நல்விருந்துநாளும் நலமாகச்செய்துவருங்
கந்தப்பமுதலியாங் கனவான்றன்வீதியிது
சந்தமுடன்பொறையுஞ் சாந்தகுணமிலங்கிய
தவக்கமில்லாமடுங் தாதாவெனவேசொல்லும் [ய்
அவக்காபொன்னுத்தம்பிவேள் அண்ணலரண்மனைபாரா
அண்டும்வில்வநல்லூர்ராஜ வீதிபாமென்
அன்னமேநடப்பாயடி. (௧௨)

மருந்துக்கிடங்குத்தெரு மாசின்னக்கடை-களிதாங்
இருந்துஞ்சுண்ணாம்புக்காரர் தெருகட்கிடங்குபாதை
செல்வப்பெருமாள்கட்டிய செவ்வேள்சினகரத்தைச்
செல்வியேகண்டுதுதி செய்யடிபாரதிமார்க்கம்
இந்தத்தெருவுகளை எங்கிழையேபாரடி [ந்தே
வந்திட்டோம்ரவுண்ரோட்டை வருவாபெண்பின்தொடர்
வயமிகுமுசல்மான்வாழும் - வீடுகளை
வந்துபார்த்துச்செல்லடி. (௧௩)

குப்புக்குப்பென்றுபுகை கொண்டுறெயில்வண்டிகள்
தப்பிலாதோடித்தங்குந் தண்ஸ்டேஷன்பாரடி
இப்படியேசென்றோமானால் எழில்வெள்ளைக்காரர்வீதி
உப்பளத்தின்பாலத்தை உத்தமியேபாரடிநீ
குக்கலைப்பிடித்தடக்குங் கொட்டாலைக்காணடி
சக்கொழிந்தநோயாளிகள் சார்கிடங்குதானிது
சன்னசித்தோப்பைவிட்டு - என்னுசைத்
தையலேக-ந்துவாடி. (௧௪)

சகரரால்தோண்டப்பட்ட சாகரத்தைப்பாராயடி
புகைக்கப்பல்சிறுகப்பல் போதலும்வருதலுமாஞ்

சீனாக்கிளாசுகளாஞ் சீட்டிகள்புடைவைகளாந்
நினைவரிலாதபல தேசச்சரக்குகளைக்
கொண்டுவந்திறக்குகின்ற கோமளர்க்கைதக்காணடி
கண்டுமொழிவண்டுவிழி கார்குழலியாமனமே
கழியாமுகத்துவாரத்தைக் - கண்டிறங்கிக்
காலூன்றினைத்துடைப்பாய். (கரு)

கண்கணுங்கான்முழங்கார் காதுக்கிளைபெண்ணே
நண்ணரிதேவாமென்றேபெக காருஞ்செருக்கிபுற்ற
கெண்டைவராலானமையுங் கெளித்திமகரமீன்களும்
அண்டுமெற்றதேளிவெளவால் ஆனைசுறாதிமிங்கிலங்
கொத்துகண்டுசெங்கராமீன் கோலாச்சிப்பாறைமீன்
பத்திபத்தியாவலையில் பாதரிழுத்தார்கொட்ட
பார்வைபார்கூடையினிற்கொண்டே - செல்கின்றார்
பைந்தொடியேபாராயடி. (கசு)

ஸ்ரீராகவன்நகரம் மேவியிதோவந்தோமே
சீராந்சோலைகளுஞ் செப்புந்தர்மசாலைகளும்
ஆறுமுகசேர்வைகட்டிய அன்னசத்திரம்பாராய்
கூறுங்கிளிமொழியே குளங்களுங்கூபங்களுங்

கடையின் விதைகளுங் கனிதானங்களும்
கடையன்னமாதர்களும் நால்வருணத்தார்களும்
மங்கைசெங்கழுநீர்த்தாயைத் - துதிக்க
நடக்கின்றாரே தேரோடி. (௧௭)

அன்னமேசீராடி அணிதேங்காய்ப்பழங்களைப்
பிள்ளையில்லாதலம்பிப் பிரியத்துடனேங்கியே
அன்னைசெங்கழுநீர்த்தாயின் அடியினிற்கொண்டுவைத்து
மன்னுமருச்சனையுடன் மணிவேதனஞ்செய்து
என்னையாளுடையவளே ஈஸ்வரியேயடைக்கலம்
உன்னையேநம்பினேனென்றே உத்தமியேயாப்பாவென்றே
உள்ளங்குளிர்ந்தேத்திடுவாய் - என்கண்ணேனே
உள்ளவரங்கேட்டிடுவாய். (௧௮)

என்றாதளிக்குங்கோளி ஏகமனதாகியே
நின்றுபூசனைமுடித்து நெருங்கியிருவருமாய்
வெளியினில்வந்தவுடன் பின்னேபறஞ்செய்யடி
எளியவிக்குநடருக்கே இரண்டுறைதந்திட - உ
மூடவனுக்குக்காலறு மூங்கைக்குமுக்காலறு
கொடுத்துள்ளமகிழ்ந்து குற்றங்களைப்பாராதே

கொம்பனையே புதுவைக்கிப்போ - தென்னுடன்
குணமாகவந்வாயடி. (௪௯)

## கொச்சகம்.

அஞ்சுகமே தேனேயென் னாருயிரே மாமயிலே
தஞ்சமெனச் செங்கழுனித் தாயாரைச் சேவித்தோம்
நெஞ்சிலுறு மெண்ணமெலா நிறையவரந் தந்திடுவாள்
மஞ்சுலவும் புதுவைக்கே வந்திடுவா யென்னுடனே.

முற்றிற்று.

செங்கழுனித்தாயார்

திருவடிகளே துணை.